29th September 1955]

SRI S. RAMALINGAM : தொழிலாளருக்குக் கொடுக்கவேண்டிய பாக்கியை, இந்தக் கம்பெனி கலைந்து விட்டதினால், அவர்களுடைய சொத்து மூலதனத்தை கம்பெனியிலிருந்து எடுத்துக்கொண்டு பாக்கிக்கு ஒரு " அட்டாச்மெண்ட் " ஆவது போடுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி முன்பே கோர்ட்டிலே சில நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆனால் இப்போது லிக்விடேஷனில் இருக்கும்போது இந்த சந்தர்ப்பத்தில் என்ன செய்யக்கூடுமோ அதை செய்வதற்குத்தான் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டுவருகிறது.

SRI M. KALYANASUNDARAM : கம்பெனி லிக்விடேஷனில் இருப்பது வாஸ்தவம்தான். ஆனால் கம்பெனியில் மானேஜராக இருந்து கொண்டே, ரிசீவராகவும், டிபெஞ்சர் டிரஸ்டியாகவும் அவர் இருக்கிறார். டிபெஞ்சர் டிரஸ்டியாக இருப்பதால், கம்பெனியின் சொத்துக்களும் அவர் கையில் இருக்கிறது. அந்தப் பணத்தை வசூலிக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி பரிசீலனை செய்யவேண்டும்.

SRI P. RAMAMURTHI : ஆகஸ்டு மாதத்திலும் செப்டம்பர் மாதத்திலும் எதிர்கக்ஷி உப தலைவரிடத்திலிருந்து மனு வந்ததாகவும் அது சம்பந்தமாக ஆலோசனை செய்யப்பட்டதாகவும் கனம் மந்திரியவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அதற்கு முந்திய காலத்திலேயே, சுமார் ஒரு வருஷத்திற்கு முந்தியே, அந்தத் தொழிலாளர்கள் தனிப்பட்ட முறையில் தங்களுக்குப் பணத்தைத் திருப்பித்தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டது உண்மையா ? அப்படியானால் இத்தனை காலம் சர்க்கார் என்ன செய்தார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மனுப்போடும்படி தொழிலாளர்களிடம் சொல்லப்பட்டது. அவர்களும் மனுப்போட்டார்கள். அதற்கு மேல்தான் அதை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் உடனே உத்திரவு போட்டு வசூல் செய்வது முடியாத காரியமாக இருந்தது. அதற்குள்ளாக இந்த லிக்விடேஷனிலும் வந்துவிட்டது.

Single-teacher schools

*2549 *Q.*—SRI R. S. ARUMUGAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of single-teacher schools in Tirunelveli district ; and

(*b*) how many of them are in Tirunelveli taluk?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 87.

(*b*) 4.

SRI R. S. ARUMUGAM : எந்த முறையை அனுசரித்து ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன ? நெல்லை ஜில்லாவில் குறைவாக இந்தப் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றனவென்பது உண்மையா ? ஜனத்தொகை குறிப்பிட்ட அளவு இருந்தால்தான் திறக்கப்படுவதாயிருந்தாலும் எங்கள் ஜில்லா பற்றி சரியாக கணக்கு கொடுக்கப்படவில்லை என்று எங்களுக்குத் தெரிகிறது. ஆகவே இதைப் புனராலோசனை செய்து இந்த வருஷம் அதிகப்படியான பள்ளிக்கூடங்களைத் திறப்பதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

[29th September 1955

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது 500-க்கு மேற்பட்ட ஜனத்தொகை இருக்கக்கூடிய எல்லா கிராமங்களிலும் பள்ளிக்கூடத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பது சர்க்காருடைய திட்டம். அதை அனுசரித்து, 500-க்கு மேற்பட்ட ஜனத்தொகை உள்ள கிராமங்களில் பள்ளிக்கூடம் இல்லாத இடங்களில் ஓராசிரியர் பள்ளிகளை ஏற்படுத்தும் இந்தத் திட்டம் வகுக்கப்பட்டு, ஜில்லாவாரியாக இந்தப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

SRI V. BALAKRISHNAN : Is it a fact that teachers in single-teacher schools are given higher scales of pay than teachers in other schools even though they may possess higher qualifications of training, etc.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, there is no scale of pay for them. A fixed pay is given to the teachers. That too is payment given as an inducement for the youth to come and join this profession. Later on, they will have to undergo the necessary training and then will have to be absorbed in the regular teaching profession.

SRI S. RAMALINGAM : 500-க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள கிராமங்களில் ஓராசிரியர் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தப் போவதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார். சாதாரணமாக ரிவினியூ வட்டங்களில் இரண்டு மூன்று ஹாம்லெட்டுகள் இருக்கின்றன. அங்கெல்லாம் 500-க்கு மேற்பட்ட ஜனத்தொகை இருந்தால் அந்த ஹாம்லெட்டுகளிலும் ஓராசிரியர் பள்ளிக்கூடங்களை அமைப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுப்பார்களா ?

8-40 a.m. THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது 500-க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள கிராமங்களில் அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களை அமைப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். தனி மஜராவைப்பற்றி கவனிக்க சர்க்கார் ஆலோசனை செய்யும். தனித்தனியாக ஒவ்வொரு மஜராவுக்கும் பள்ளிக்கூடங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றால் இப்பொழுது விஸ்தரிக்கப்பட்டுள்ள பள்ளிக்கூடங்களின் அனுகூலன்களை கவனித்துதான் அதைப்பற்றி யோசிக்க முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அதைப் பற்றி பரிசீலனை செய்த பிறகுதான் முடிவு செய்ய முடியும்.

SRI M. DHARMALINGAM : Sir, may I know from the Hon. Minister whether it is a fact that the single-teacher schools will be opened only in places where the villagers provide the necessary accommodation? If so, may I know whether any such recommendation was made by the Planning Commission? Supposing the villagers are not in a position to provide accommodation, does it mean that they should not be educated? If the Government's object is to provide education for these poor villagers, will they come forward to provide accommodation in places where the villagers are very backward and they are not able to provide accommodation as per Government Orders?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, unless people take a keen interest in the schools it will not be possible to make it a success. So in order to see that sufficient enthusiasm is created amongst the villagers also a condition has been laid down that they should provide the accommodation for these schools. But where

29th September 1955]

the villages are backward and it is not possible to get the accommodation from the villagers then the Government provide their own accommodation.

Sri T. C. NARAYANAN NAMBIAR : Sir, are Government aware of the fact that in these single-teacher schools because of the increase in the number of children the classes have become unwieldy and effective management of the classes and giving of instruction has become impossible, and if so will the Government consider the desirability of converting these single-teacher schools into multi-teacher schools wherever the number of children attending the schools has increased considerably?

The Hon. Sri C .SUBRAMANIAM : Yes, Sir, this question was taken into consideration and the strength of the teachers has been increased wherever it was found necessary.

Dr. K. B. MENON : Have the Government any immediate scheme to have these single-teacher schools in the remaining villages where the population is 500. If the Government have no such scheme, will they have the schools started within the first and second years of the Second Five-Year Plan period?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, this year we sanctioned the opening of an additional 2,000 single-teacher schools. With that it is hoped it would cover all the villages which have got a population of 500 and above. Therefore, Sir, even before the end of the First Five-Year Plan period that target would have been reached.

Sri S. R. ARUMUGAM : ஸார், ஓராசிரியர் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களை அமைப்பதற்குமுன் அவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறதா ? அப்படி பயிற்சி கொடுக்கப்படுவதாக இருந்தால் அவர்களுக்கு எத்தனை மாதம் பயற்சி கொடுக்கப்படுகிறது ? அப்படி கொடுக்கக் கூடிய பயிற்சி காலம் போதுமானது என்று சர்க்கார் கருதுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : போதுமான பயிற்சி கொடுக்கப்படவில்லை என்பது தெரியும். இது ஆரம்பமாக இருப்பதால் வேண்டிய பயிற்சி கொடுக்கப்படவில்லை. அவர்களை நிரந்தரமாக நியமிக்கும்போது அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுக்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

Sri K. VINAYAKAM : Sir, Whereas the motive of this scheme is a laudable one, namely, to lure unemployed educated people to this profession, the salary paid to such S.S.L.C. completed men is Rs. 40 but the trained teacher gets only Rs. 35 under the present scale of pay. Does it not perpetuate the difference between the two grades and will this not create a heart-burning among the professional teachers.

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, this will not be a permanent feature. Therefore there is no question of perpetuating the difference. Even providing employment to educated youth is only a subsidiary motive of the scheme to start single-teacher schools. Now we have to get sufficient number of men to man these institutions which are situated in far off villages. That

is why an inducement is given by giving them higher pay. But all this will be regularised when we send them for training and appoint properly trained teachers for the schools.

SRI V. MUTHU : ஸார், ஓராசிரியர் பள்ளி முறை ஒரு வருஷ காலமாக நடந்து வருவதாக தெரிகிறது. ஏற்கெனவே நல்ல டிரெயினிங் கொடுத்து அதாவது இரண்டு வருஷங்கள் ட்ரெயினிங் ஆன ஹையர் க்ரேட், செகண்டரி க்ரேட் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வேலை இன்எபிஷியண்டாக இருக்கிறது என்ற புகார்கள் உள்ள ரிப்போர்டை நாம் பார்க்கிறோம். மந்திரி அவர்களுடைய பதிலிலிருந்து இப்பொழுது ஆறு மாத பயிற்சி கொடுக்கப்படுவதாக தெரிகிறது. இந்த ஆறு மாத பயிற்சி பெற்ற ஆசிரியர் பள்ளிகள் எபிஷியண்டாக நடத்தப்படுகிறதா அல்லது இன்எபிஷண்டாக நடத்தப்படுகிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த ஓராசிரியர்கள் பள்ளிகள் மூலமாக நம்முடைய கல்வி தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்ற அபிப்பிராயத்தில் இவைகள் ஆரம்பிக்கப்பட்டன. பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களில் இவைகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற திட்டம் வகுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டன. எப்படி பள்ளிக்கூடங்கள் நடைபெற வேண்டும் எப்படி ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்க வேண்டும் என்பதைப்பற்றிய விவரங்களைக் கொடுக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டி அக்டோபர் மாதம் 2-ம் தேதி அதனுடைய அறிக்கையை சமர்ப்பிக்க இருக்கிறது. அதற்குப் பிற்பட்டு அவைகளை ஆலோசித்து நிரந்தரமான ஏற்பாடுகள் செய்யப்படும்.

SRI M. P. SUBRAMANYAM : ஓராசிரியர்கள் தற்காலிகமாக நியமித்திருப்பதாக கூறினார்கள். அவர்களுக்கு இரண்டாண்டு பயிற்சி கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் சிலர் 6 வார பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய நிலை என்ன ? இவர்களுக்கு முழு பயிற்சி என்றால் எவ்வளவு காலம் ? எப்பொழுது கொடுக்கப்படும் ? இவர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்வதால் அவர்களுடைய எதிர்கால நிலைமை என்ன என்று தெரிந்துகொள்ளமுடியாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கு வேலை நிரந்தரப்படுத்தப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது கொடுக்கப்பட்டு வரும் பயிற்சி போதாது. இரண்டு வருஷங்கள் பயிற்சி சாதாரணமாக கொடுக்கப்பட்டு வருகிறது. ஆறு வார பயிற்சி என்பது தாற்காலிகமாக கொடுக்கப்படுகிறது. அப்படி ஆறு வார பயிற்சி கொடுக்கப்பட்டவர்களை நிரந்தரமாக எடுத்துக் கொள்ள முடியாது. அவர்கள் நிரந்தரமாக வரவேண்டும் என்று நினைத்தால் அதற்கு வேண்டிய பயிற்சியை எடுத்து தான் ஆக வேண்டும்.

SRI M. NARAYANAN NAMBIAR : Sir, the district boards are appointing teachers under them in the single-teacher schools. May I know whether the Government have permitted them to post district board teachers in single-teacher schools. If this is done will it not stand in the way of the educated unemployed getting employment ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, we have specified the qualifications required for appointment as teachers in these schools, and if they satisfy the provisions of these rules, then certainly anybody can be appointed to these posts. The District Board is the competent authority to post the teachers.

29th September 1955]

Sri Y. MANJAYA SHETTY: Sir, for the construction of these single-teacher schools, a sum of Rs. 500 is paid by the Government. May I know whether the said amount will be paid by the Government if a pucca building is put up by the villagers under the National Extension Scheme or the Local Development Scheme in addition to the half-grants paid under those schemes?

The Hon. Sri C. SUBRAMANIAM: I think the hon. Member is referring to another scheme altogether. This scheme is for the purpose of opening single-teacher schools. It is expected under this scheme that the villagers will provide the accommodation free of cost or free of rent. In respect of the other thing the hon. Member may put another separate question; I shall answer.

Sri M. PALANIYANDI: ஸார், இந்த ஓராசிரியர் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை எடுப்பதாக இருந்தால் அவர்கள் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாக எடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தும் சில ஜில்லா போர்டுகளில் அப்படி நியமிக்கும் போது தங்களுக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்றுபார்த்துக் கொண்டு வேண்டியவர்களை நியமிக்கிறார்கள், என்ற ரிப்போர்ட்வந் திருக்கிறதா. அப்படி வந்திருந்தால் தயவு செய்து அரசாங்கம் உடனடியாக வேண்டியவர்களுக்கு சலுகை காட்டாமல் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாக எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக் கொள்ளுவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: அம்மாதிரியான புகார் அரசாங்கத்திற்கு வரவில்லை. புகார் இருந்திருந்தால் கனம் அங்கத்தினர் அவர்களே முதன் முதலில் அதைப்பற்றி எழுதியிருப்பார் என்று நினைக்கிறேன்.

* 2550 *Q*.—**Sri A. RATNAM**: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) how many single-teacher schools were opened in the South Arcot district during the year 1954–55;

(*b*) how many teachers were appointed and the number of Harijans among them; and

(*c*) why adequate representation was not given to Harijan teachers?

The Hon. Sri C. SUBRAMANIAM: (*a*) 219.

(*b*) 219 teachers of whom 6 were Harijans.

(*c*) Sufficient number of Harijans were not available for appointment. It is almost of the same type as the previous question, with reference to another district, so that I feel there may not be any necessity for supplementaries.

Sri A. RATNAM: உபாத்தியாயர் தேர்ச்சி பெற்ற ஹரிஜனங்களில் எத்தனை பேர்கள் மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். எத்தனை பேர்களுக்கு ஆசிரியர் வேலை கொடுக்கவில்லை. இனவாரியாக, ஜில்லா வாரியாக எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இனவாரி பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் ஏன் ? ஜில்லா அதிகாரிகள் ஹரிஜனங்களை எடுத்துக்கொள்வதில்லை என்பதைக் குறித்து அரசாங்கத்திற்கு ஏதாகிலும் தகவல் வந்திருக்கிறதா ?